# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:142** **தேதி:-01.12.2016**

## 8வது அனைத்திந்திய மாநாட்டு கொடியேற்றமும் கருத்தரங்கங்களும்

அன்பார்ந்த தோழர்களே,

சென்னையில் டிசம்பர் 31 முதல் ஜனவரி 3 வரை சென்னையில் நடைபெற உள்ள BSNL ஊழியர் சங்கத்தின் 8வது அனைத்திந்திய மாநாட்டை ஒட்டி தமிழகத்தின் **அனைத்து கிளைகளிலும் டிசம்பர் 8ஆம் தேதி BSNL ஊழியர் சங்கத்தின் 8 கொடிகளை அலங்கரித்து கொண்டாடுவது என்று மாநில செயற்குழுவில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் தோழர் KG போஸின் நினைவு நாள் மற்றும் அகில இந்திய மாநாட்டு கருத்தரங்கங்களை மாநிலத்தின் முக்கியமான 9 மையங்களில் (கோவை, சேலம், வேலூர், கடலூர், பாண்டி, திருச்சி, மதுரை, நெல்லை மற்றும் நாகர்கோவில் ஆகிய மையங்களில்) நடத்துவது என்றும் அதில் பங்கேற்க உள்ள தலைவர்களையும் முடிவு செய்யப்பட்டுள்ளது.** ஒரு சில தலைவர்களின் வருகையை ஒட்டி திருச்சி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் மட்டும் 8ஆம் தேதி நடத்துவது என்றும் இதர பகுதிகளில் டிசம்பர் 9ஆம் தேதி நடத்துவது என தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த பட்டியலில் இல்லாத மாவட்ட தோழர்கள் அருகாமையில் உள்ள மாவட்டங்களில் நடைபெற உள்ள கருத்தரங்கத்தில் கலந்துக் கொள்ள வேண்டும்.

இந்த நிகழ்ச்சிகளை கிளை, மாவட்ட, மாநிலச் சங்க பொருப்பாளர்கள் திட்டமிட்டு விமரிசையாக நடைபெறுவதை உறுதி செய்திட வேண்டும். மாவட்ட செயலாளர்கள் வர இருக்கின்ற தலைவர்களை அழைத்து பேசி அவர்கள் வருவதற்கான ஏற்பாடுகளை செய்திட வேண்டும்.

8வது அகில இந்திய மாநாட்டு நிதியினை முழுமையாக உடனடியாக வரவேற்புக் குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். இன்னமும் சரியாக ஒரு மாத காலம் கூட இல்லை என்பதை கணக்கில் கொண்டு தங்களின் கோட்டாக்களை உடனடியாக பூர்த்தி செய்திட வேண்டும். அகில இந்திய மாநாட்டில் வெளியிட உள்ள சிறப்பு மலருக்கான விளம்பரங்களை அனுப்புவதில் மாவட்ட சங்கங்கள் இன்னமும் கூடுதல் கவனம் எடுக்க வேண்டிய அவசியம் உள்ளது.

இன்றைக்கு ஏற்பட்டிருக்க எல்லா நெருக்கடிகளையும் சந்தித்து நமக்கு தரப்பட்டிருக்கக் கூடிய பொறுப்பான அகில இந்திய மாநாட்டை வெற்றிகரமாக நடத்திட அனைத்து விதமான ஒத்துழைப்புகளையும் நமது தோழர்கள் மிகச்சிறப்பாக நல்கிட வேண்டும் என தமிழ் மாநில சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**நமது வாழ்வை காத்திடும் சங்கத்தின் மாநாடு இது.....**

**BSNLஐ காத்திடும் சங்கத்தின் மாநாடு இது.....**

இந்த மாநாட்டை வெற்றிகரமாக்கிட நாம் ஒன்று பட்டு தேனீக்களாய் செயல்படுவோம். இது தான் BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய மாநாடு என அனைவரும் போற்றும் வண்ணம் நடத்திடுவோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(அபாபு ராதாகிருஷ்ணன்)**

**மாநில செயலாளர்**